## புது வாழ்வு தந்தவரே

புது வாழ்வு தந்தவரே
புது துவக்கம் தந்தவரே

நன்றி உமக்கு நன்றி
முழு மனதுடன் சொல்கின்றோம்
நன்றி உமக்கு நன்றி
மன நிறைவுடன் சொல்கின்றோம்

பிள்ளைகளை மறவாமல்
ஆண்டு முழுவதும் போஷித்தீரே - உம்
குறைவுகளை கிறிஸ்துவுக்குள்
மகிமையில் நிறைவாக்கி நடத்தினீரே - என்

முந்தினதை யோசிக்காமல்
பூர்வமானதை சிந்திக்காமல்
புதியவைகள் தோன்றச் செய்தீர்
சாம்பலை சிங்காரமாக்கி விட்டீர்

கண்ணீருடன் விதைத்ததெல்லாம்
கெம்பீரத்தோடு அறுக்கச் செய்தீர்
ஏந்தி நின்ற என் கரங்கள் எல்லாம்
கொடுக்கும் கரங்களாய் மாற்றி விட்டீர்